# சிறப்புப்பாயிரம்.

சுத்தசட்குணங்களானசுந்தரமுகமோராறுங்
கைத்தொகைகளுமுந்நான்குகண்களுங்கொண்டுநின்ற
நித்தியனநகனீசனிராமயனிமலனெம்மான்
றத்துவாதீதமுன்னோன்சகலலோகைகநாதன். (க)

(இ-ள்.) சுத்தசட்குணங்களானசுந்தரஓராறுமுகமும் - தூய்மையையுடைய ஆறுகுணங்களான அழகிய ஆறு திருமுகங்களையும்—(முந்நான்கு) கைத்தொகைகளும் - பன்னிரண்டாகிய திருக்கரக்கூட்டங்களையும்—முந்நான்குகண்களும் - பன்னிரண்டுதிருநேத்திரங்களையும்—கொண்டுநின்ற - திருவருளாற்கொண்டுநின்ற—நித்தியன் - எப்பொழுதுமுள்ளானும்—அநகன்-பாவமில்லானும்—ஈசன் - ஈசனும்—நிராமயன்-நோயில்லானும்—நிமலன் - மலமில்லானும்—எம்மான் - எம்முடைய இறைவனும்—தத்துவாதீதமுன்னோன்-தத்துவங்களைக்கடந்த முன்னோனும்—சகலலோகைகநாதன் - சகலலோகங்கட்குமாகிய குமாரமூர்த்தி—எ-று. (க)

குறுமுனியினிதுதேர்ந்துகொளவறிவுறுத்திவைத்த
மறுவறுதிராவிடத்திவ்வயங்கியற்கெழீஇயமேன்மை
பெறுநிகண்டறிஞர்பல்லோர்பேசினரவற்றுளெங்குஞ்
செறிவுறவளர்ந்தன்றம்மசெய்யமண்டலவனாலே. (உ)

(இ-ள்.) குறுமுனியினிதுதேர்ந்து கொளவறிவுறுத்திவைத்தமறுவறுதிராவிடத்தில் - அகத்தியமுனி யினிதாயறிந்துகொள்ளத் (தனதுதிருவாக்கால்) அறிவித்த குற்றமற்றதமிழிலே—வயங்கியற்கெழீஇயமேன்மைபெறுநிகண்டு - விளங்குகின்ற இயற்பகுதியிற்பொருந்திய மேன்மைபெற்ற நிகண்டுகளை—அறிஞர்பல்லோர்பேசினர் - அறிவுடையோர் பலர்சொன்னார்—அவற்றுள் - அந்நிகண்டுகளுள்—எங்குஞ்செறிவுறவளர்ந்தன்றுசெய்யமண்டலவனால் - எவ்விடத்துஞ் செறிதல்பொருந்தவளர்ந

தது செம்மையாகிய வீணாமண்டலவணிகண்டு—எ-று. அம்ம-உரையசையிடைச்சொல். (உ)

ஒருமொழியருத்தம்பல்வேறுணர்த்திடுந்தொகுதியாங்கு
மருவுறவிரிந்ததென்னமற்றஃதருத்தமொன்று
தருமியலிலாதவாற்றிற்றகும்பொருளாய்வான்புக்குப்
பெரிதிடர்ப்படுமொணுக்கர்பேதுறவொழிக்கவுன்னு. (ரு)

(இ-ள்.) ஆங்குஒருமொழிபல்வேறருத்தமுணர்த்திடுந்தொகுதிமருவுறவிரிந்ததென்ன-அங்கிகண்டில் ஒருசொற்குப்பலவேறுபொருளை யறிவிக்குந்தொகுதி (ஒன்று) பொருந்தவிரிந்தாற்போல—(ஒருமொழி) ஒன்றுஅருத்தந்தருமியலஃதிலாதவாற்றில் - ஒருசொற்கொரு பொருளைத்தருந்தொகுதி (ஒன்று) அதன்கணில்லாதவாற்றால்—தகும்பொருளாய்வான்புக்குப்பெரிதிடர்ப்படுமொணுக்கர் - (அச்சொற்களுடைய) தகுந்தபொருளை ஆராய்வான்புகுந்து பெரிதுந்துன்பப்படு மாணுக்கருடைய—பேதுறவொழிக்கவுன்னு - மதிமயக்கை நீக்கநினைத்து—எ-று. மற்று அசைநிலை. (ரு)

வழிவழியாயசெல்வவளமறைக்காடநாமப்
பழிதவிர்மகிந்திரன்றன்பௌத்திரனுகிவந்தோன்
ஒழிவறுகுணத்தினிவ்வுலகெலாமடிப்படுத்த
விழுமியபுகழ்வேற்பிள்ளைமெய்த்தவத்துதித்தசீரான். (சு)

(இ-ள்.) வழிவழியாயசெல்வவளமறைக்காடநாமப் பழிதவிர்மகிந்திரன்றன் - வழிவழியாய் செல்வவளத்தையுடைய மறைக்காடனெனும் பெயரைக்கொண்ட பழிநீங்கியமகிபனுடைய—பௌத்திரனுகிவந்தோன் - மகன்மகனுகிவந்தவனும்—ஒழிவறுகுணத்தினுன் - குறைவற்ற நற்குணங்களாலே—இவ்வுலகெலாமடிப்படுத்த - இத்தேசமுழுவதையுங் கீழ்ப்படுத்திய—விழுமியபுகழ்வேற்பிள்ளை - சிறந்தபுகழையுடைய வேற்பிள்ளையெனு நாமத்தையுடையோனுடைய—மெய்த்தவத்துதித்தசீரான் - மெய்ம்மையாகிய தவத்தாலுதித்த குணமுடையவனும்.எ-று

ஆதுலர்க்கன்னமீந்துமௌடதமுயிர்கட்கீந்தும்
நீதியினிறைந்துந்தொல்சீர்நெடுங்குலத்தலைமைபூண்டும்
மாதகைவாழ்வினோங்கிவருமயில்வாகனப்பேர்
மேதகுதருமவேந்தன்மெய்யுயிர்த்துணையாம்பின்னோன். (௫)

(இ-ள்.) ஆதுலர்க்கன்னமீந்தும் - யாசகர்கட்கன்னங்கொடுத்தும்—உயிர்கட்கௌடதமீந்தும் - (நோயால்வருந்தும்) மக்கட்குமருந்துகொடுத்தும்—நீதியினிறைந்தும்- நீதிநெறியினிறைவுற்றும்—தொல்சீர்நெடுங்குலத்தலைமைபூண்டும் - பழைமையாகிய கீர்த்தியையுடையபெரியகுலத்தலைமையைப்பூண்டும்— மாதகைவாழ்வினோங்கிவரும்- பெரியதகுதியையுடையவாழ்வினோங்கிவளரும்—மயில்வாகனப்பேர் மேதகுதருமவேந்தன் - மயில்வாகனனென்னும் பெயரையுடையமேன்மைதக்க தருமபூபதியுடைய—மெய்யுயிர்த்துணையாம்பின்னோன் - மெய்மையானவுயிர்த்துணையாகு மிளவலும்—எ-று. (௫)

கூர்ந்தநுண்ணுணர்வாற்றெள்ளிக்குறைவறப்பற்பனூலும்
ஓர்ந்தவனம்மனோருக்கொருபெருந்துணையாய்வாழ்வோன்
நேர்ந்தவர்பிறரிலாதநெறிமையான்றனதுமாட்டுச்
சார்ந்தவர்ப்புரக்குமேலைத்தகையியல்வழாக்குணத்தோன். (௬)

(இ-ள்.) கூர்ந்தநுண்ணுணர்வாற்றெள்ளிக்குறைவறப்பற்பனூலுமோர்ந்தவன் - கூரியநுண்ணறிவாலேதெளிந்து நிறைவுறப் பலபலநூல்களையுமாராய்ந்தவனும்—நம்மனோருக்கொருபெருந்துணையாய்வாழ்வோன் - நம்போலியோர்க் கோர்பெரியதுணையாய்வாழ்பவனும்—நேர்ந்தவர்பிறரிலாதநெறிமையான்- (தன்னை) நிகர்த்தவர் பிறரில்லாத ஒழுக்கமுடையவனும்—தனதுமாட்டுச்சார்ந்தவர்ப்புரக்குமேலைத் தகையியல்வழாக்குணத்தோன் - தன்கட்சேர்ந்தவரைக் காக்கவல்ல மேலாகிய பெருமைத்தன்மைநீங்காத குணமுடையவனும்—எ-று. (௬)

தெய்வமாண்டிருவெண்ணீற்றுருத்திருக்குறுமலத்தைக்காயுஞ்
சைவமாசமையத்துற்றுச்சரியையிலொழுகுந்தூயோன்

பௌவமாநிலக்கட்டங்கும்பல்லுயிர்க்குயிரேயன்னான்
எவ்வமாம்வினைகளெல்லாமெறிந்தறநடாத்துமேலோன். (எ)

(இ-ள்.) தெய்வமாண்டிருவெண்ணீற்ருற் றிருக்குறுமலத்தைக்காயும் - தெய்வத்தன்மையான பெருமையையுடைய திருவெண்ணீற்றினாலே குற்றம்பொருந்திய மலங்களையறுக்கவல்ல—சைவமாசமையத்துற்றுச் சரியையிலொழுகுந்தூயோன்-சைவமாகிய பெரியசமையத்திற்பொருந்திச் சரியைநெறியினடக்குஞ் சுத்தமுடையவனும்—பௌவமாநிலக்கட்டங்கும்பல்லுயிர்க்குயிரேயன்னான் - கடலாற்சூழப்பட்ட பெரியபூமியின்கட்டங்கிய பலவுயிர்கட்கு முயிரையொத்தவனும்—எவ்வமாம்வினைகளெல்லாமெறிந்தறநடாத்துமேலோன் - குற்றமாகிய தீவினைகளெல்லாவற்றையும்நீக்கி நல்வினையைநடத்துகின்ற மேலானவனும்—எ-று. (எ)

குடதிசைக்குளிர்வெண்டிங்கட்கோடுதாழ்வேணியண்ணல்
தடநெடுஞ்சிகரநொச்சித்தளியும்பூருவமாமாசைக்
கடவயிற்றொருகோட்டைங்கைக்கரிசினகரமுநண்ண
நடுவுறவமர்ந்தவானநாடுறழ்வல்லையூரான். (அ)

(இ-ள்.) குடதிசைக்குளிர்வெண்டிங்கட் கோடுதாழ்வேணியண்ணல் - மேற்றிசைக்கண்ணே குளிர்ந்த வெள்ளியபிறைக்கோடு தங்கப்பெற்ற சடையையுடைய சிவபெருமானுடைய—தடநெடுஞ்சிகரநொச்சித்தளியும் - பெரிய நெடியசிகரங்களையுடைத்தாகிய மதிலையுடையகோவிலும்—பூருவமாமாசைக்கடவயிற்றொருகோட்டைங்கைக்கரிசினகரமுநண்ண - கீழ்த்திசைக்கண்ணே குடம்போலும் வயிற்றினையும், ஒற்றைக்கொம்பினையும், ஐந்துகரங்களையுமுடைய யானைமுகக்கடவுளுடைய கோவிலும்பொருந்த—நடுவுறவமர்ந்தவானநாடுறழ்வல்லையூரான் - (இவற்றுக்கு) நடுவணுகப்பொருந்திய தேவலோகத்தையொத்த வல்லையென்னும் நகரையுடையவனும்—எ-று. (அ)

காண்டகுதிதலைப்பொம்மற்கனதனத்தியாணர்க்காரப்
பூண்டகுசெங்கேழ்க்கஞ்சப்பூந்திருவமர்ந்தமார்பன்
மாண்டகுஞானமூர்த்திவள்ளலோர்பொருட்சொல்லான
ஏண்டருதொகுதியொன்றிங்கியம்பெனவிசைத்தானாக. (௯)

(இ-ள்.) காண்டகுதிதலைப்பொம்மற்கனதனத்து - அழகு தகுந்ததேமலையுடைத்தாகிய பொலிவுபொருந்தப்பெற்ற கனத்த தனத்தின்கண்ணே—யாணர்க்காரப்பூண்டகு - அழகியபொன்னாபரணம் பொருந்தப்பெற்ற—செங்கேழ்க்கஞ்சப்பூந்திருவமர்ந்தமார்பன் - செம்மையாகிய நிறத்தையுடைய தாமரைப்பூவில்வாழுமிலக்குமி தங்கப்பெற்றமார்பையுடையவனுமாகிய—மாண்டகுஞானமூர்த்திவள்ளல் - மாட்சிமைபொருந்திய ஞானமூர்த்தியென்னு மியற்பெயரையுடைய வள்ளற்றன்மையையுடையான்—ஓர்பொருட்சொல்லான - ஒருபொருட்சொற்களையுடைத்தான—ஏண்டருதொகுதியொன்று - நிலைமையையுடைய நிகண்டொன்றை—இங்கியம்பென விசைத்தானாக - இவ்வுலகத்தின்கட் பாடுகவெனச்சொன்னானாக—எ-று. தொகுதி ஆகுபெயர். (௯)

பண்டிதர்சங்கமுற்றுப்பஃறிசைப்பரப்புமேவிக்
கொண்டுளசிறப்பிற்றாகிக்குலாவுறுமதுரநீர்மைத்
தண்டமிழ்நூலினுள்ளுந்தகுதிசால்வடநூலுள்ளும்
எண்டருமொருபொருட்சொலியைவனதெரீஇத்தெளிந்து.(௧௦)

(இ-ள்.) பண்டிதர்சங்கமுற்றுப் பஃறிசைப்பரப்புமேவிக் கொண்டுளசிறப்பிற்றாகிக்குலாவுறும் - புலவருடைய சபையைப்பொருந்திப் பலவகைப்பட்டதிக்குகளின்பரப்பைமேவிக்கொண்ட சிறப்பினையுடைத்தாய் விளங்கும்—மதுரநீர்மைத்தண்டமிழ்நூலினுள்ளும் - இனிமைத்தன்மையையுடைய தமிழ்மொழிகளுள்ளும்—தகுதிசால்வடநூலுள்ளும் - பெருமைநிறைந்த வடமொழிகளுள்ளும்—எண்டருமொருபொருட்சொல் - எண்ணினைத்தரு மொருபொருட்சொற்களில்—இயைவனதெரீஇத்

தெளிந்து - (செய்யுள்வழக்குக்கும் உயர்ந்தோர்வழக்குக்கும்) பொருந்துவனவற்றை ஆராய்ந்துதெளிந்து—எ-று. நூலிரண்டும் ஆகுபெயர். (௧௦)

நன்றுறக்ககரமாதினகரவீறெதுகையாக
வொன்றுறக்கோவையாக்கியோரடிக்கிருசொற்சேர்த்து
மன்றுறத்திகழுஞ்சிந்தாமணியெனும்பெயர்த்தாயென்றும்
நின்றுறவிருத்தயாப்பினெறிப்படநிகழ்த்தினுல். (௧௧)

(இ-ள்.) நன்றுறக்ககரமாதினகரவீறெதுகையாக வொன்றுறக்கோவையாக்கி-நன்மைபொருந்தக் ககரவெதுகைமுதல்னகரவெதுகையிறுக ஒன்றுபடக்கோவைசெய்து — ஓரடிக்கிருசொற்சேர்த்து - (செய்யுளின்) ஒவ்வோரடிக்குமிவ்விரண்டுசொற்களைச்சேர்த்து—மன்றுறத்திகழுஞ் சிந்தாமணியெனும்பெயர்த்தாய் - சபையின்கண்ணே பொருந்தவிளங்குஞ் சிந்தாமணிநிகண்டென்னும் பெயரினையுடைத்தாய்—என்றும் நின்றுறவிருத்தயாப்பினெறிப்படநிகழ்த்தினன் - எக்காலமும்நிலைபெறும்வண்ணம் விருத்தப்பாவினு லொழுங்குபடப்பாடினன்—எ-று. ஆல் - அசை. (௧௧)

தரம்பெறுமுன்னையூர்வாழ்சங்கரவள்ளறன்சேய்
திரம்பெறுமுத்திச்செல்வச்சிவமதபத்திமாண்போன்
கரம்பெறுநெல்லியென்னக்கலைப்பொருள்விணுய்முற்றேர்ந்து
வரம்பெறுபுலவன்செய்யவைத்தியலிங்கன்றனே. (௧௨)

(இ-ள்.) தரம்பெறுமுன்னையூர்வாழ்சங்கரவள்ளறன்சேய் - பெருமைபெற்ற முன்னர்க்கூறப்பட்டவல்வை நகரில்வாழுஞ் சங்கரனெனுநாமதேயத்தையுடைய வளையாது கொடைப்போனுடையபுத்திரனும்—திரம்பெறுமுத்திச் செல்வச்சிவமதபத்திமாண்போன் - நிலைபெற்றமோக்கமாகிய செல்வத்தையுடையசைவசமையத்திற் பத்தியையுடைத்தானபெருமையையுடையவனும்—கலைப்பொருள்விணுய்க் கரம்பெறுநெல்லியென்னமுற்றேர்ந்து வரம்பெறுபுலவன் - (பல்வகைக்) கலைகளிலுள்ளபொருள்

களைக்கற்று அகங்கையிற்பொருந்திய நெல்லிக்கனியினுள்ளிருப்பனவற்றை முற்றுங்காண்டல்போன் முற்றுமுணர்ந்து மேண்மையைப்பெற்றபுலவனுமாகிய—வைத்தியலிங்கன் - வைத்தியலிங்கனென்னு மியற்பெயரையுடையோன்—எ-று. தானும்-ஏயும்-அசைச்சொற்கள். (கஉ)

இச்சிறப்புப்பாயிரத்துள் ஆக்கியோன்பெயர் முதலியன பெறப்பட்டன. பாயிரஞ்செய்வோர் தன்னாசிரியருந் தன்னோடொருங்குகற்றவரும் தன்மாணாக்கரும் தகுமுரைகாரருமாதலினிஃது தன்னாசிரியராற்செய்யப்பட்டது. அவர்யாரெனில் சுப்பிரமணியசுவாமிதொண்டராகிய யாழ்ப்பாணத்து உடுப்பிட்டி

அ. சிவசம்புப்புலவர்.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.